1970 செப்டம்பர் 1]

மாவட்டத்திற்குக் கேட்டிருக்கிறார்கள். அங்கேயும் நிலம் பெறுவதிலும் வரைபடம், மதிப்பீடு ஆகியவை அனுப்பிவைப்பதிலும் தாமதம் இருக்கிறது. கன்யாகுமரி மாவட்டத்தில் வரை படம் அமைத்து, மதிப்பீடு ஆகியவை அனுப்பி வைத்தால் நிதி வழங்குவதில் அதிகக் கடினம் இருக்காது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, கோவையில் கட்டவிருக்கும் விளையாட்டு அரங்கத்திற்குப் பல லட்சக் கணக்கான ரூபாய் செலவழிக்க இருக்கிறார்கள். ஆகவே, கோவை அரங்கத்திற்கு அரசாங்கத்தின் உதவித் தொகை இந்த ஆண்டில் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கோவையைப் பொறுத்தவரையிலும் நிலம் பெறுவதில் தகராறு இருக்கிறதென்பதால், அது முடிவு பெற்றதற்குப் பிறகு, அங்கிருந்து கோரிக்கை வந்த பிறகு, அதுபற்றி அரசு ஆலோசிக்கும். அது முடிவு பெறுமானால் அரசாங்கம் அதற்கு மானியம் தருவதில் ஆட்சேபணை இருக்காது.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, தஞ்சை அரண்மனையில் இருக்கும் விளையாட்டு அரங்கை நல்ல முறையில் சீர்படுத்துவதற்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா? அத்தகைய விண்ணப்பம் ஏதாவது வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி, துவக்கப்படும் வகையில் விண்ணப்பம் வந்தால், ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படலாம்.

திரு. என். வரதராஜன். தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டில் மதுரை மாவட்டக் கலெக்டர் அவர்கள் க்ஷேமநல நிதியிலிருந்து விளையாட்டு அரங்கம் கட்ட பல லட்ச ரூபாய் வசூல் செய்தார்கள். அந்த விளையாட்டு அரங்கம் கட்டுவது எந்த நிலையில் இருக்கிறது? எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மதுரையில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஆனால், அதற்குரிய வரைபடம், மதிப்பீடு இன்னும் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. விரைவில் வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவை வந்த பிறகு தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மதுரை மருத்துவக் கல்லூரி

பி. பார்மசி மாணவர்கள் உண்ணாவிரதம்

* 164 வினா—திருமதி. கே. பி. ஜானகியம்மாள்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர், தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் பி. பார்மசி மாணவர்கள் 13—10—1969 முதல் உண்ணாவிரதமிருக்கும் சமயம் அரசு தலையீட்டால் தீர்த்து வைக்கக்கோரி மதுரை கிழக்குத் தொகுதி சட்டப்

பேரவை உறுப்பினர் 16—10—1969-ல் அனுப்பிய கடிதம் கிடைக்கப் பெற்றதா?

(இ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பரிசீலனையில் இருக்கின்றது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே இந்தக் கேள்வியை நான் கொடுத்து ஏறக்குறைய ஓராண்டு ஆகிறது. அது இப்பொழுது வந்திருப்பதால் இதையொட்டிய ஒரு கேள்வியைக் கேட்கலாம் என்று கருதுகிறேன். மதுரை மருத்துவக் கல்லூரியில் பி. பார்மசி படிக்கும் மாணவர்கள் கோரிக்கை எந்த அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி. பார்மசி படிப்பவர்கள் சிலபல கோரிக்கைகளை எடுத்து வைத்தார்கள். அவைபற்றி இயக்குநர் அவர்கள் ஆராய்ந்து அரசுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். அரசாங்கம் பல்வேறு துறைகளைக் கலந்து தக்க முடிவு எடுக்க வேண்டும். குறிப்பாக அவர்கள் பதவியை கெஜட் பதவியாக்கவேண்டும், அதிகச் சம்பளம் தர வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். சம்பளக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்படவேண்டிய தன்மைதான் அதில் வரும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பர்மெனென்ட் ரிகக்னிஷன் வேண்டுமென்றும், கண்டென்ஸ்டு கெமிகல் இன்ஜினீரிங் கோர்ஸ் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டுமென்றும், போஸ்ட்-கிராஜுவேட் படிப்புக்கு வகை செய்து, எம். பார்மசி ஏற்படுத்த வேண்டும் என்றும், தனிக் கல்லூரி பார்மசிப் படிப்புக்காக வைக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இவை எல்லாம் உடனடியாகவே நிறைவேற்றப்படக்கூடியன அல்ல. அவற்றிற்குப் பரிந்துரைகள் செய்திருக்கிறார்கள் இயக்குநர் அவர்கள். அவை அரசாங்கத்தினுடைய ஆய்வில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆய்வுக்குப் பின் உடனடியாக ஏற்றுக் கொள்ளக்கூடியவை ஏற்றுக்கொள்ளப்படும். இப்பொழுது பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இயக்குநர் அவர்கள் என்ன என்ன பரிந்துரைகளைக் கூறியிருக்கிறார்கள்? அவற்றில் எத்தனை கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளுவதாக இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருந்துவருகிறது என்றேன். முடிவுகள் செய்வதற்கு முன்னால், எது எது என்று சொல்லுவதற்கில்லை.